**Judicial Form No-53**
**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO. 4, THOOTHUKUDI.**

**Case No CC 798/2022**
**Prosecution Witness –PW 1, LW 2**

| | | | |
|---|---|---|---|
| Name: | சேசையா | Nationality: | இந்தியன் |
| Father's Name : | அந்தோணிசாமி | Calling: | மீன்பிடி தொழில் |
| Village: | தூத்துக்குடி | Religion: | |
| Taluk: | தூத்துக்குடி | Age: | 56 |
| District: | தூத்துக்குடி | | |

**(Accused absent. 355 BNSS Petition filed and allowed.)**

**Solemnly affirmed in accordance with the provisions of Sec 3 and 4 of the Indian Oaths Act 1969 r/w 35,36 of Criminal rules of practice 2019 on 23.02.2026**

**சாட்சி நீதிமன்ற ஊழியரால் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் பதிவு செய்யப்படுகிறது**

**முதல் விசாரணை :**

1. நான் தற்போது தூத்துக்குடியில் மாதா கோவில் தெருவில் குடியிருந்து மீன்பிடி தொழில் செய்து வருகிறேன். எதிரி இன்று நீதிமன்றத்தில் ஆஜர் இல்லை. எதிரி மைக்கேல் முரே என்பவரை தெரியும். கடந்த 2011 ஆம் ஆண்டு ஒரு சிறிய படகு எடுத்து தொழில் செய்வதற்காக முடிவு செய்து லோன் போட்டு பெறுவதற்காக முயற்சி செய்து என்னுடைய உறவினரான சென்னையை சேர்ந்த ஆல்பர்ட் என்பவர் என்னிடம் சென்னையை சேர்ந்த மைக்கேல் முரே என்பவர் எனக்கு பழக்கம் என்றும் அவருக்கு ஏற்கனவே லோன் எடுத்து கொடுத்திருப்பதாகவும் கூறி சென்னைக்கு கிளம்பி வரச்சொன்னார். நானும் கிளம்பி சென்னைக்கு சென்று ஆல்பர்ட் என்பவரை பார்த்தேன். மறுநாள் மைக்கேல் முரேக்கு ஆல்பர்ட் போன் செய்து நாங்கள் தங்கியிருந்த லாட்ஜிற்கு வரசொன்னார். மேற்படி மைக்கேல் முரே லாட்ஜிற்கு வந்தார்.

2. மேற்படி மைக்கேல் முரே என்பவர் வங்கி மேலாளர் நிறைய நபர்கள் பழக்கம் என்றும் அவர்கள் மூலம் லோன் எடுத்து தருவதாகவும், அதற்காக மேலாளர்களுக்கு சிறிது கமிஷன் தொகை கொடுக்க வேண்டும் என்றும் கூறினார். அதற்கு லோன் எடுத்து தாருங்கள் அதன் பின்பு கமிஷன் தொகை தருகிறேன் என்று கூறினேன். ஆனால் மைக்கேல் முரே என்னிடம் சரி என்று கூறிவிட்டு ஊருக்கு செல்லலாம் என்று கூறினார். மறுநாள் மைக்கேல் முரே எனக்கு போன் செய்து ஒரு

இன்சூரன்ஸ் பாலிஸி போட வேண்டும் என்றும் அதன் மூலமாக லோன் எடுத்து தருகிறேன் என்றும் கூறினார்.

3. அதன்படி நான் மைக்கேல் முரேயின் சென்னை மதுரவாயல் கிளை தமிழ்நாடு மெர்க்ன்டைல் வங்கி கணக்கு எண். 400083 என்று முடியும் வங்கி கணக்கிற்கு 2011 ம் வருடம் 10 ம் மாதம் ஒரு நாள் ரூ.1,50,000/- அனுப்பினேன். பின்பு மறு மாதம் பாலிசி தொகையை கட்டவேண்டும் என்று மீண்டும் ரூ.1,50,000/- தொகை கேட்டார். அதனால் நான் மைக்கேல் முரேயின் சென்னை மதுரவாயல் கிளை தமிழ்நாடு மெர்க்ன்டைல் வங்கி கணக்கு எண்.37374 என்று முடியும் வங்கி கணக்கிற்கு 2011 ம் ஆண்டு 11 ம் மாதம் ஒரு நாள் ரூ.1,50,000/- அனுப்பினேன். பின்பு மைக்கேல் முரேயிடம் போனில் ஏற்கனவே ரூ.1,50,000/- வீதம் 2 முறை மொத்தம் ரூ.3 லட்சம் கொடுத்து விட்டேன் என்றும் மறுபடியும் இப்படி பணம் கேட்கிறீர்கள் என்று கேட்டதற்கு மேனேஜருக்கு கொடுக்க வேண்டியிருக்கு என்று சொன்னார். பின்பு மேனேஜருக்கு கொடுக்க வேண்டும் என்று ரூ.1,00,000/- பணத்தை மைக்கேல் முரே கேட்டதால் அவருடைய வங்கி கணக்கு எண்.400083 என முடியும் வங்கி கணக்கிற்கு அனுப்பி வைத்தேன்.

4. திரும்பவும் அவர் கேட்டதால் ரூ.50,000/- பணத்தை மைக்கேல் முரேயின் சென்னை மதுரவாயல் கிளை தமிழ்நாடு மெர்க்ன்டைல் வங்கி கணக்கு எண்.400083 என்று முடியும் வங்கி கணக்கிற்கு 2011 ம் வருடம் 11 ம் மாதம் ஒரு நாள் அனுப்பி வைத்தேன். பின்பு அதே தினம் மதியம் மைக்கேல் முரே எனக்கு போன் செய்து சொன்னதால் அதே வங்கி கணக்கு எண்ணிற்கு ரூ.60,000/- அனுப்பி வைத்தேன். மறுநாள் எனக்கு மைக்கேல் முரே போன் பண்ணி ரூ.40,000/- பணம் பேங்க் மேனேஜருக்கு கொடுக்க வேண்டும் என்று கூறினார். அதனால் 2011 ம் வருடம் 11 ம் நாள் ஒரு நாள் ரூ.40,000/- பணத்தை 400083 என்று முடியும் வங்கி கணக்கிற்கு அனுப்பி வைத்தேன். பின்பு ரூ.10,000/- பணத்தை மைக்கேல் முரே அவருடைய செலவு தொகைக்காக கேட்டார். அதனால் 2012 ம் ஆண்டு 1 வது மாதம் ரூ.10,000/- பணத்தை மேற்படி தமிழ்நாடு மெர்க்ன்டைல் வங்கி கணக்கு எண்.400083 என்று முடியும் வங்கி கணக்கிற்கு அனுப்பி வைத்தேன். ஆக மொத்தம் ரூ.5,60,000/- பணத்தை அனுப்பி வைத்துள்ளேன்.

5. மைக்கேல் முரேயிடம் இது பற்றி கேட்டதற்கு மேனேஜர் விடுமுறையில் சென்றுள்ளதாக கூறி காலம் கடத்தி வந்தார். பின்பு நான் இது சம்மந்தமாக Complaint கொடுக்க போகிறேன் என்று மைக்கேல் முரேயிடம் கூறினேன். 2014 ம் ஆண்டு 5 வது மாதம் என்னை சென்னைக்கு வருமாறும், பணத்தை திருப்பி கொடுத்துவிடுவதாகவும் என்னிடம் கூறினார். அதனால் சென்னைக்கு சென்றேன். மைக்கேல் முரே என்னை லாட்ஜிற்கு போக சொன்னதால் நான் அங்கு சென்றேன். அவரும் லாட்ஜிற்கு வந்தார். அப்போது அவரிடம் என்னை இப்படி ஏமாற்றி விட்டீர்களே என்று கேட்டதற்கு Complaint கொடுக்க வேண்டாம் என்றும் பணத்தை கொடுத்து விடுகிறேன் என்றும் கூறி 2014 ம் ஆண்டு 5 ம் மாதம் ஒரு நாள் தேதியிட்டு ரூ.3 லட்சம் என்று தொகை நிரப்பி கொடுத்தார். பின்பு அதை நான் பெற்று கொண்டு வந்து விட்டேன். பின்பு தூத்துக்குடி பீச் ரோட்டில் உள்ள TMB வங்கி கிளையில் மேற்படி காசோலையை வசூலுக்கு அனுப்பினேன். ஆனால் பணம் இல்லை என்று கூறி காசோலையை திரும்ப கொடுத்துவிட்டார்கள்.

6. மேற்படி காசோலை திரும்பிய விபரத்தை மைக்கேல் முரேயிடம் போனில் தெரிவித்தேன். அதற்கு உடனே பணத்தை போட்டு விடுவதாகவும், காத்திருக்கவும் சொன்னார். ஆனால் அவர் சொன்ன படி பணத்தை போட்டு விடவில்லை. பின்பு ரூ.50,000/– க்கான காசோலை தந்து விடுவதாக சொல்லி என்னை சென்னைக்கு வர சொன்னார். அதன் பேரில் நான் 2014 ம் ஆண்டு 6 வது மாதம் சென்னைக்கு சென்றேன். பின்பு என்னிடம் ரூ.50,000/– ற்கான காசோலையை என்னிடம் கொடுத்தார். பின்பு தூத்துக்குடிக்கு வந்த தூத்துக்குடி பீச் ரோட்டில் உள்ள TMB வங்கி கிளையில் மேற்படி காசோலையை வசூலுக்கு அனுப்பினேன். ஆனால் பணம் இல்லை என்று கூறி காசோலையை திரும்ப கொடுத்துவிட்டார்கள். பின்பு 2 நாட்கள் கழித்துதிரும்பவும் மேற்படி ரூ.50,000/–க்கான காசோலையை மேற்படி வங்கியில் வசூலுக்கு அனுப்பிய போது போதிய பணம் இல்லை என்று காசோலை திரும்பி விட்டது. பின்பு அவரிடம் தொடர்பு கொண்டு பேசிய போது சரியான பதில் கூறாததால் சென்னைக்கு கிளம்பி சென்றேன்.

7. சென்னை மதுரவாயில் காவல் நிலையத்தில் இது சம்மந்தமாக ஒரு புகார் கொடுத்தேன். பின்பு மேற்படி காவல் நிலையத்தில் விசாரித்து எனக்கு மாதம் மாதம்

ரூ.50,000/— கொடுத்து கொடுக்க வேண்டிய பணத்தை கொடுத்துவிட வேண்டும் என்று மைக்கேல் முரேயிடம் சொல்லி அனுப்பினார்கள். ஆனால் அவர் சொன்னது போல் எனக்கு பணத்தை போட்டு விடவில்லை. பின்பு அவரிடம் போன் பண்ணி கேட்டதற்கு அவர் என்னை மிரட்டினார். சென்னையில் அவர் பெரிய ஆள் என்றும் முடிந்ததை பார்த்துகொள் என்றும் கூறினார். பின்பு எனது வழக்கறிஞரிடம் ஆலோசனை செய்து விட்டு தூத்துக்குடி மாவட்ட குற்றப்பிரிவில் இது சம்மந்தமாக புகார் மனு கொடுத்தேன். என்னை போன்று வேறு நபர்களை எதிரி ஏமாற்றியதாக சொல்லி எனக்கு தனி வழக்கு பதிவு செய்ய முடியாது என்றும் அந்த வழக்கில் என்னுடைய புகாரை சேர்த்துள்ளதாகவும் கூறினார்கள். பின்பு என்னிடம் வழக்கை நீதிமன்றத்திற்கு அனுப்பி விட்டதாகவும், அதனால் என்னை நீதிமன்றத்தில் பார்த்து கொள்ள வேண்டுமென்றும் கூறினார். இது சம்மந்தமாக மாவட்ட குற்றப்பிரிவு போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**(ஆவணங்கள் குறியீடு செய்வதற்காக வேண்டி வழக்கு முதல் விசாரணையின் தொடர்ச்சிக்காக ஒத்தி வைக்கப்படுகிறது.)**

Taken down by me/before me in open court,
interpreted/read over to the witness and
admitted by the deponent to be correct.

Sd/—S.Packiaraj,
Judicial Magistrate No.IV,
Thoothukudi.